

September 2025

# PREMA ANANDA VAHINI

Love Truth Purity Devotion Wisdom

# பிரேம ஆனந்த வாகினி

செப்டம்பர் 2025

## பொருளடக்கம்


1. சுவாமிஜியின் சத்சங்கம் ~ ஆன்மிகப் பாதையில் இருத்தல் என்றால் என்ன?

7. ஆசிரமத்தில் விநாயகச் சதுர்த்தி

9. உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனச் செய்திகள்

10. உங்கள் கேள்விகளுக்கு சுவாமிஜி பதிலளிக்கிறார்

13. சத்சங்கம்: மரணம் உங்களை வந்தடைவதற்கு முன் விரைந்து செயல்படுங்கள்!

16. இளைஞர் குழுவினருக்கு ஒரு செய்தி


*“திருமணம் செய்துக் கொண்டு குழந்தைகளை பெற்ற பிறகு, அவர்களை சரியான மற்றும் நல்லப் பாதையில் வழிநடத்துவது உங்கள் கடமை.”*

*~சுவாமிஜி*

# சுவாமிஜியின் சத்சங்கம்

## ஆன்மிகப் பாதையில் இருத்தல் என்றால் என்ன?

*1997, மே மாதம் சுவாமிஜி வழங்கிய சத்சங்கம்*



எனது அன்பார்ந்த ஆத்ம சொரூபர்களே,

இன்று ஒவ்வொருவருக்கும் ஆன்மிகப் பாதையிலும் ஞானத்திலும் ஆர்வம் இருப்பதைப் போல் தெரிகிறது. தவிர, ஒவ்வொருவருக்கும் அதைப் பற்றி எக்கச்சக்கமான கேள்விகளும் இருக்கின்றன. நீங்கள் பல கேள்விகளைக் கேட்டாலும் கூட, நான் அவற்றிக்கு பதில் கூறினாலும் கூட, இந்த ஆன்மிகப் பாதையைப் பற்றி நீங்கள் உண்மையில் உணர்நது கொண்டது, புரிந்து கொண்டது என்ன?

ஆன்மிகத்தைப் பற்றி நீங்கள் கேள்விகள் கேட்கத் தொடங்கியதும், அதற்கு முடிவே இருக்காது. ஏன்? ஏனெனில், ஆன்மிகம் மிகப் பெரிய விஷயம். வாழ்வின் மிக உயரிய சிந்தனையான சனாதன தர்மம், மிகவும் ஆழமானது, விளக்குவதற்கு கடினமானது.

இருந்த போதிலும், நான் இதை உங்களுக்கு விளக்குகிறேன். ஆனாலும், நான் இதை உங்களுக்கு எப்படி விளக்கினாலும், லௌகீக உலகில், லௌகீகப் பொருட்களில், மாயையில், உலகியல் மக்களுடன் நீங்கள் பேசும் அனைத்து தேவையற்ற பேச்சுக்கள் மற்றும் விவாதங்களில், நீங்கள் படிக்கும் புத்தகங்களில் நீங்கள் சிக்கியிருப்பதால், நான் சொல்வதை உங்கள் மனம் முழுமையாக உள்வாங்காது. மேலும், நீங்கள் லௌகீக உலகத்தைப் பற்றி பல விஷயங்களைப் படித்து தெரிந்து கொள்ளவும் கூடும். இவை அனைத்தும் இறுதியில் ஆன்மிகத்தைப் பற்றி உங்களுக்குப் பலவிதமான கருத்துக்களை உருவாக்குகின்றன. இதன் விளைவாக, உங்கள் மனதை நீங்களே குழப்பிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும், இந்தக் குழம்பிய மனநிலையுடன், ஆன்மிகப் பாதையில் எதையாவது உணர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள். இதை நான் புரிந்து கொள்கிறேன். ஏனென்றால், உங்களுக்கு ஆன்மிகத்தின் மீது

விருப்பம் இருக்கிறது. அதனால்தான் நீங்கள் தொலைவிலிருந்து இங்கு வந்து என்னிடம் அதைப் பற்றிக் கேள்விகள் கேட்கிறீர்கள்.

எண்ணற்ற மக்கள் என்னிடம் பல கேள்விகளைத் கேட்கிறார்கள். நான் அவை அனைத்திற்கும் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதால் என்ன பயன்? அதன் பிறகு நீங்கள் என்ன புரிந்து கொள்வீர்கள்? நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்கும் போது, நான் விஷயங்களை கவனமாகவும் அழகாகவும் விளக்கி, நீங்கள் பதிலை முழுமையாகப் புரிந்து கொள்வதை உறுதி செய்கிறேன். அப்படியிருந்தும், நீங்கள் புரிந்து கொண்ட பிறகும் கூட, உங்கள் மனம் திருப்தி அடையாமல் மேலும் பல கேள்விகள் எழுகின்றன. அவை ஒருபோதும் நிற்பதில்லை.

> "உங்கள் மனம் இலேசாக இருக்க வேண்டும் அது வெறுமையாக இருக்க வேண்டும். கலக்கமடையாதீர்கள், குழப்பமடையாதீர்கள். உங்கள் மனதையும் இதயத்தையும் விடுதலையாக்குங்கள். உங்கள் எண்ணங்களை அமைதிப்படுத்துங்கள்." உங்களை நீங்களே வெறுமையாக்கிக் கொள்ளுங்கள். இதுவே ஆன்மிகப் பயிற்சி.

மனம் ஏன் ஆன்மிகம் என்ற விஷயத்தை மீண்டும், மீண்டும் ஆராய்ந்து கொண்டே இருக்கிறது? உங்கள் மனம் ஒவ்வொரு சிறிய, அற்ப விஷயத்திற்கும் பதில்களைத் தேடுகிறது. ஒவ்வொரு சிறு கேள்விக்கும் சரியான பதிலை அறிய விரும்புகிறது. ஆனாலும், நான் அப்படிப்பட்ட ஒரு கேள்விக்குச் சரியாகப் பதிலளித்தாலும், நீங்கள் அந்தத் தருணத்தில் திருப்தி அடைந்தாலும் ஒரு நிமிடம், ஒரு மணி நேரம், ஒரு நாள் அல்லது சில நாட்களுக்குப் பிறகு, மற்றொரு கேள்வி எழும். நான் அதற்குப் பதிலளித்தப் பிறகு, நீங்கள் மீண்டும் சில புதிய கேள்விகளைப் பற்றிச் சிந்திப்பீர்கள்.

நம் மனம் எப்போதும் ஆன்மிகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே மும்முரமாக இருக்கிறது. ஆனால், ஆன்மிகத்தைப் பொறுத்தவரை, ஆராய்ச்சி செய்வதன் மூலம் உண்மையை கண்டறிய முடியாது. ஆன்மிகப் பாதையில் நீங்கள் எதையாவது உணர்ந்து கொள்ள விரும்பினால், ஒரு உயர்ந்த ஆன்மிக நிலையை அடைந்து ஞானத்தைப் பெற விரும்பினால், நீங்கள் பயிற்சி செய்ய வேண்டும்!

புத்தகங்களைப் படிப்பது, எனது சொற்பொழிவுகளைக் கேட்பது மற்றும் ஆன்மிக விஷயங்களைப் பற்றி விவாதிப்பது ஆகியவை உங்கள் பயணத்தில் உங்களுக்குத் துணை புரியும். ஆனால் இந்த விஷயங்கள் மட்டுமே உங்களை ஆன்மிக ரீதியாக முதிர்ச்சியடையச் செய்யாது. இவற்றைச் செய்வதன் மூலம் ஆன்மிகப் பாதை பற்றிய உங்கள் புரிதலை ஆழப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், ஆன்மிக ரீதியாக நீங்கள் வளர்ச்சி அடைய விரும்பினால், உங்கள் புரிதலைச் செயலில் காட்ட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்குவதாலோ அல்லது உலகைச் சுற்றி வந்து மற்ற ஆசிரமங்களுக்குச் சென்று பேசுவதாலும் அரட்டை அடிப்பதாலும் நீங்கள் ஆன்மிக ரீதியாக வளச்சி அடைவீர்கள் என்று நினைக்கிறீர்களா? ஒருபோதும் இல்லை. இது வெறும் ஒரு வகையான பொழுது போக்கு மற்றும் சுற்றுலா மட்டுமே. நீங்கள் பலருடன் பலவிதமான விஷயங்களைப் பற்றிப் பேசுவீர்கள். அது உங்கள் மனதில் ஏராளமான கேள்விகளை — அவற்றில் பல தேவையற்றவை — எழுப்பும். இது உங்கள் மனதை மேலும் குழப்படையச் செய்வதில் மட்டுமே முடியும்.

ஆன்மிகப் பாதை என்றால் என்ன? ஆன்மிகப் பாதையில் இருப்பது என்பது ஆன்மிகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வது அல்ல. ஆன்மிகப் பாதை என்பது பயிற்சி செய்வதாகும்— நீங்கள் அறிந்ததை, நீங்கள் புரிந்து கொண்டதை, நீங்கள் ஏற்கனவே உணர்ந்ததை நடைமுறைப்படுத்துவதாகும். பயிற்சி இல்லாமல் உங்களால் உண்மையை உணர முடியாது. உன்னதமான ஞானத்தைப் பெற முடியாது. லௌகீக உலகம் நம்மை ஈர்க்கிறது. மனம் இந்த உலகின் இன்பங்களின்பால் ஈர்க்கப்படுகிறது. நமது எண்ணங்கள் லௌகீகப் பொருட்களை நோக்கி ஈர்க்கப்படுகின்றன. மேலும் இந்த உலகில் நாம்

> "ஆன்மிகப் பாதையில் இருப்பது என்பது ஆன்மிகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்வது அல்ல. ஆன்மிகப் பாதை என்பது பயிற்சி செய்வதாகும்~ நீங்கள் அறிந்ததை, நீங்கள் புரிந்து கொண்டதை, நீங்கள் ஏற்கனவே உணர்ந்ததை நடைமுறைப்~ படுத்துவதாகும்."



பலவிதமான பொருட்களை விரும்புகிறோம். நமது சரீரம் ஏன் இத்தனைப் பொருட்களை விரும்புகின்றது? அதன் ஆசைகள் முடிவற்றவை. உங்களால் மனதை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியும் என்று நினைக்கிறீர்களா? இன்று மனம் ஒரு மிதிவண்டியை கேட்கும். நாளை, அது ஒரு மோட்டார் சைக்கிளைக் கேட்கும். அடுத்த நாள் ஒரு காரைக் கேட்கும். இன்னும் சிறிது காலத்திற்குப் பின், அது ஒரு புதிய நவீன காரைக் கேட்கும். எனவே, ஆசைகளுக்கு முடிவே இல்லை. மனம் ஒரு ஆசையிலிருந்து மற்றொன்றிற்குத் தாவுகிறது. உங்களிடம் முன்பு இருந்ததை விடப் பெரியதாகவும், சிறந்ததாகவும் விரும்பப்படுவதற்கு எப்போதும் ஏதேனும் ஒன்று இருந்து கொண்டே இருக்கும். ஒரு கட்டத்தில் நீங்கள் நின்று, உங்களிடம் இருப்பது போதுமானது என்று முடிவு செய்ய வேண்டியிருக்கும்.

முதலில் இந்தக் கேள்விகளுக்கு நீங்களே உங்களுக்கு பதில் சொல்லிக் கொள்ள வேண்டும்: நான் ஏன் இந்த உலகிற்கு வந்தேன்? நான் இன்னும் எத்தனை வருடங்கள் வாழ்வேன்? இந்த வாழ்க்கையின் நோக்கமென்ன? நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? இந்தக் கேள்விகளை உங்களிடமே கேட்டுக் கொண்டு, ஏற்கனவே உங்களிடமிருப்பதைக் கொண்டு திருப்தியடையுங்கள். உங்களிடமிருப்பது போதும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? "போதும்" என்ற மன நிலைக்கும் நீங்கள் வரவேண்டும்—அப்பொழுது மனம் தானாகவே உங்கள் வழியில் செல்லும்.

நீங்கள் எப்படி இந்த உலகில் பற்றுகளை குறைத்துக் கொள்ளப் போகிறீர்கள்? இது எளிதானது என்று நினைக்கிறீர்களா? இது எளிதானதுதான், ஆனால் நீங்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. உங்கள் பற்றுகளைக் குறைத்துக் கொள்ள நீங்கள் விரும்பவில்லை, காரணம், நீங்கள் இன்னும்

தேவையில்லாமல் லௌகிக உலகில் ஈடுபட்டுள்ளீர்கள், தேவையில்லாமல் மனதைத் தொந்தரவு செய்கிறீர்கள் மற்றும் தேவையில்லாமல் தேவையில்லாத கேள்விகளைக் கேட்கிறீர்கள்!

சிந்தியுங்கள்: உங்களிடம் இருப்பதைக் கொண்டு நீங்கள் திருப்தியடைகிறீர்களா? இந்தப் பூமியில் வாழ்வதற்கு ஒருவருக்கு உண்மையிலேயே தேவைப்படுவது என்ன? இங்கு நாம் இருப்பதன் உண்மையான அர்த்தம் என்ன? இதுவே புரிந்து கொள்ள வேண்டிய முதல் விஷயம், இந்தப் புரிதல் உங்கள் இதயத்தை, மனதை, சிந்தனைகளை ஊடுருவிச் செல்ல வேண்டும்.

ஆன்மிகத்தைப் போதிக்கும் குருமார்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் – அது எளிதான விஷயம். ஆனால், அதனை சீடர்கள் தான் பயிற்சி செய்ய வேண்டும். எல்லா குருமார்களும் ஆன்மிகத்தை விளக்குவார்கள், பின்பற்றக் கூடிய ஆன்மிகப் பாதையின் கோட்பாடுகளை கற்றுக் கொடுப்பார்கள்; மாணவர்களே அதனைக் கவனமாகக் கேட்டு, கவனமாக யோசித்து, கவனமாக பயிற்சி செய்து, தங்களை உயர்ந்த நிலைக்கு முன்னேற்றிக் கொள்ள வேண்டும்.

உங்களிடம் இருப்பது தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது என்று உங்களுக்குத் தோன்றினால், நீங்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

ஆசிரமத்தில் யாரேனும் ஒருவர் அரட்டையடித்தாலோ அல்லது குப்பைக் கதைகளைப் பேசினாலோ அதில் ஈடுபடாதீர்கள். அத்தனை தொலைவிலிருந்து அரட்டையடிப்பதற்காகத் தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா? தேவையில்லாத கதைகளைப் பேசி, தேவையில்லாத லௌகீக விஷயங்களில் ஈடுபடுவதற்காகவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்? நீங்கள் ஏன் இந்தியாவிற்கு, தென்னிந்தியாவிற்கு வந்துள்ளீர்கள்? விடுமுறைக்காக நீங்கள் இங்கு வரவில்லை. இது ஒரு சுற்றுலாதளம் அல்ல; ஒரு உல்லாச விடுதியல்ல. நீங்கள் இங்கு பயனுள்ள ஒன்றைக் கற்றுக் கொள்ள வந்துள்ளீர்கள். இந்த ஆசிரமத்தில் ஆன்மிகத்திற்கு ஏற்ற சூழல் இருப்பதாலேயே இங்கு வந்துள்ளீர்கள்; இது உங்களுக்கு ஒரு நல்ல ஆற்றலைக் கொடுக்கிறது.

அந்த ஆன்மிக ஆற்றலை ஈர்த்துக் கொள்ள விரும்பினால், தேவையில்லாத பேச்சுகளில் உங்களை ஈடுபடுத்தி, எந்தக் காரணமும் இல்லாமல் உங்களைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். ஏனெனில், குழப்பமடைந்த ஒருவரால் ஆன்மிக ஆற்றலை பெற முடியாது. நீங்கள், உங்களை முன்னேற்றிக் கொள்வதற்காக சுவாமி பிரேமானந்தாவின் ஆன்மிக ஆற்றலைப் பெறவும் ஈர்த்துக் கொள்ளவும் விரும்பினால், நீங்கள் நிம்மதியான மனநிலையில் இருக்க வேண்டும். உங்கள் மனம் இலேசாக இருக்க வேண்டும்; அது வெறுமையாக இருக்க வேண்டும். கலக்கமடையாதீர்கள், குழப்பமடையாதீர்கள். உங்கள் மனதையும் இதயத்தையும் விடுதலையாக்குங்கள். உங்கள் எண்ணங்களை அமைதிப்படுத்துங்கள். உங்களை நீங்களே வெறுமையாக்கிக் கொள்ளுங்கள். இதுவே ஆன்மிகப் பயிற்சி.

என்னுடைய செய்தியைப் பெற்றுக் கொண்டவுடன், அதனை உங்கள் வாழ்க்கையில் பயிற்சி செய்யுங்கள். சுவாமிஜியின் தெய்வீக ஆற்றலைப் பெற்றுக் கொள்வது எளிது, அந்த ஆற்றல் நீங்கள் முன்னேறுவதற்கா இயல்பாகவே உதவி செய்யும்.

ஆகவே, இந்த உலகில் பிறந்து, இங்கு வந்து, என்னைச் சந்தித்து ஆன்மிகத்தைப் பற்றி என்னுடன் பேசிய நீங்கள் அனைவரும் பாக்கியசாலிகளாகவும் வரம் பெற்றவர்களாகவும் இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஆன்மிகத்தைப் பின்பற்ற விரும்பினால் – உங்களை ஆன்மிக ரீதியாக மேம்படுத்திக் கொள்ள, ஆன்மிகத்தில் ஏதேனும் ஒன்றை உணர்ந்து கொள்ள – நீங்கள் முழுமையாக

அதில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். ஒரு கணமும் நேரத்தை வீணாக்கக் கூடாது. இன்றுவரை நீங்கள் எப்படி தேவையற்ற விஷயங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள் என்று உங்களைப் போலவே எனக்கும் தெரியும். எனவே, இனிமேல் நேரத்தை வீணாக்காமல் உங்களை நீங்களே மேம்படுத்திக் கொள்ளத் தொடங்குங்கள்.

அதைச் செய்வதற்கு நீங்கள் உங்கள் உடலை நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். சரியான நேரத்தில் சாப்பிடுங்கள். ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள். போதுமான ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியாக இருங்கள். அதே நேரத்தில் உங்கள் ஆன்மிகப் பயிற்சிகளைச் செய்து தியானம் செய்யுங்கள். இதைச் செய்வது உங்கள் ஆன்மிக வாழ்விற்கும், உங்கள் உடல் நலத்திற்கும் ஆதரவாக இருக்கும். ஆன்மிக வாழ்விற்கு ஆரோக்கியமான உடல் மிகவும் அவசியம். ஏனென்றால் உங்கள் உடல் இல்லாமல் நீங்கள் உண்மையை உணர முடியாது. உங்களை நீங்களே உணர்ந்து ஞானத்தை அடைய முடியாது. எனவே, உங்கள் உடலை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் மனதை தொந்தரவு செய்யவோ அல்லது தேவையில்லாமல் குழப்பவோ வேண்டாம். இல்லையென்றால் இந்த வாழ்க்கைக்கு எந்த மதிப்பும் இருக்காது. நீங்கள் எதையோ உணர்ந்து கொள்வதற்காகவும் எதையோ உணர்ந்து கொள்வதற்காகவும், எதையோ புரிந்து கொள்வதற்காகவும் பிறந்திருக்கிறீர்கள். எனவே அது சாத்தியமான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு முதலில் உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆன்மிகத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தொடங்குங்கள்; அதில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, ஒவ்வொரு கணத்தையும் பயனுள்ளதாக்குங்கள். உங்கள் ஓய்வு நேரத்தில், தொண்டு மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபடுங்கள். இந்த வழியில் உங்கள் சரீரம் சோம்பலடையாது. ஏனெனில் உடல் சோம்பலாக இருக்கும் போது, அது உடலுக்கு மட்டுமல்ல, உங்கள் மனதிற்கும் நல்லதல்ல. மனமும் அதன் முழுத் திறனுடன் செயல்படாது. பஜனைகள் பாடுவது, அபிஷேகங்கள் செய்வது, தியானம் மற்றும் யோகா போன்ற ஆன்மிகப் பயிற்சிகளில் பங்கேற்புங்கள் — இந்தச் செயல்பாடுகள் உங்கள் ஆன்மிகப் பாதையில் உங்களுக்குத் துணை நிற்கும். மேலும், நீங்கள் என்ன பயிற்சி செய்தாலும், உங்கள் அன்பை இறைவன் மீது செலுத்துங்கள்.

உங்கள் தூய இதயத்தைத் திறந்து கடவுளை நேசியுங்கள். கடவுள் உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை. எனவே, உங்கள் இதயத்தைத் திறந்து, உங்களையே கடவுளிடம் அர்ப்பணியுங்கள்; அவர் உங்களைக் கவனித்துக் கொள்வார். மேலும், நீங்கள் உங்கள் சுயத்தை உணர்ந்து கொள்ள உதவுவார்.

தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்; கடவுளைக் காண உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். தேவையற்ற விஷயங்களிலும் தேவையற்ற எண்ணங்களிலும் ஈடுபடாமல், ஆன்மிகத்தைப் பயிற்சி செய்வதற்கு உங்களைத் தயார்படுத்துவதே இதன் பொருள்.

ஆன்மிகப் பாதையைப் பின்பற்றுமாறு நான் உங்களை ஏன் வலியுறுத்துகிறேன்? இன்று பெரும்பாலான மக்கள் வாழ்க்கை என்பது லௌகீக உலகை அனுபவிப்பது மட்டுமே என்று நினைக்கிறார்கள். அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள, நிலையற்ற லௌகீகப் பொருட்களின் மீது பற்று கொண்டுள்ளனர். நீங்கள் நிரந்தரமான ஆனந்தத்தை உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த ஜென்மங்களிலும் கூட இந்த வாழ்நாளிலேயே நீங்கள் உண்மையான பேரின்பத்தை அனுபவிக்க முடியும். இந்த உண்மையான பேரின்பத்தை அடைய நீங்கள் ஒரு நல்ல சூழலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும், நீங்கள் மற்றவர்களுடன் விவாதிக்கும்போதோ அல்லது எதையாவது ஆராய்ச்சி செய்யும்

போதோ தேவையில்லாமல் தவறுகளைக் கண்டுபிடிக்காமல் எப்போதும் நேர்மறையான வழியில் சிந்திக்க வேண்டும். இந்த உலகில் எப்போதும் நல்லதும் கெட்டதும் இருக்கும். எனவே எப்போதும் நல்ல விஷயங்களைப் பற்றியே சிந்தியுங்கள், நல்ல எண்ணங்களைக் கொண்டிருங்கள். இது உங்களுக்குப் பயனளிக்கும்; இது உங்களுக்கு மகிழ்ச்சியையும் ஞானத்தையும் கொண்டு வரும்.

ஆகவே, இந்த வாய்ப்பைத் தவற விடாதீர்கள். நான் உங்களை ஆசீர்வதித்து ஆதரிப்பேன். எப்போதும் உங்களை ஊக்குவிப்பேன். எல்லாவற்றையும் விளக்க நான் தயாராக இருக்கிறேன். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நான் உங்களுக்கு உண்மையை விளக்குவேன்.

நீங்கள் உண்மையை உணர விரும்புகிறீர்கள். ஆனால் உங்கள் லௌகீக மனம் எப்போதும் உங்களைத் தொந்தரவு செய்கிறது. திருமண வாழ்க்கையின் அர்த்தம் என்ன? பெரும்பாலான மக்கள் திருமணம் செய்து கொண்டு உலக வாழ்க்கையை அனுபவிக்க விரும்புகிறார்கள். அது சரிதான். ஆனால் திருமண வாழ்க்கையின் உண்மையான அர்த்தம் என்ன? நீங்கள் திருமணம் செய்து கொண்டு, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளைப் பெற்று, பணம் சம்பாதித்து, வாழ்க்கையை அனுபவித்து, உங்கள் குழந்தைகள் படித்து, பின்னர் அவர்களும் திருமணம் செய்துகொள்வதை உறுதி செய்து, இறுதியில் நீங்கள் வயதாகி இறந்து விடுவீர்கள். திருமண வாழ்க்கை இவ்வளவுதான் என்று நினைக்கிறீர்களா? பணம் சம்பாதித்து வங்கியில் சேமிப்பது மட்டும்தான் வாழ்க்கை என்று நினைக்கிறீர்களா? இல்லை. விலங்குகளும் இதே போன்ற காரியங்களைச் செய்கின்றன. ஆனால், உங்களுக்கு ஆறாம் அறிவு இருக்கிறது. ஆறாம் அறிவுள்ள ஒரு மனிதனுக்கு ஒரு துணை இருப்பதன் அர்த்தம், உங்களுக்கிடைய தூய்மையான அன்பு இருக்க வேண்டும் என்பதுதான். மேலும் உங்களுக்குக் குழந்தைகள் பிறக்கும் போது, நீங்கள் ஒரு ஆன்மிக உண்மையையும் கற்பிக்க வேண்டும்.

இல்லாவிட்டால் பிள்ளைகள் தொலைக்காட்சி, திரைப்படங்கள் பார்ப்பதிலேயே தங்கள் நேரத்தை செலவிடுவார்கள். இது அவர்களின் இளம் மனதைக் குழப்பி, கெடுத்துவிடும். பல தேவையற்ற விஷயங்களுக்கு அவர்களை ஆளாக்கும். இது யாருடைய தவறு? வாழ்க்கையின் உண்யொன மதிப்பை உணராத பெற்றோர்களுடைய தவறு. இந்த வாழ்க்கை எவ்வளவு மதிப்புமிக்கது என்பதை நீங்கள் உண்மையாகவே புரிந்து கொண்டால், உங்கள் குழந்தைகளுக்கு எது நல்லது என்பதை நீங்கள் கற்றுக் கொடுப்பீர்கள். அப்போது உங்கள் குழந்தைகளும் வாழ்க்கையின் மதிப்பை உணர்ந்து புரிந்துகொண்டு, சரியான பாதையைப் பின்பற்றுவார்கள். அவர்கள் நல்ல எண்ணங்களுடன், மன அமைதியுடனும் உண்மையான மகிழ்ச்சியுடனும் நல்ல வாழ்க்கையை வாழ்வார்கள்.

நம் குழந்தைகள் அழகான மற்றும் உன்னதமான வாழ்க்கையை வாழ வேண்டும்; அவர்கள் சரியான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் ஒரு நல்ல எதிர்காலத்திற்காக தெய்வீக ஆற்றலையும் ஆசீர்வாதங்களையும் பெற வேண்டும். தங்கள் குழந்தைகள் ஒரு நல்ல மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கை பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும். திருமணம் செய்து கொண்டு, குழந்தைகளைப் பெற்றெடுத்த பிறகு, அவர்ககளைச் சரியான மற்றும் நல்ல வழியில் வழிநடத்துவது உங்கள் கடமையாகும். அவர்களைப் புறக்கணித்து, அவர்கள் தாங்களாகவே வளர்ந்து விடுவார்கள் என்று நினைப்பது தவறு. எது சரி, எது தவறு என்பதை அவர்களுக்கு அன்பாக எடுத்துக் கூறி, வாழ்க்கையில் அவர்களைச் சரியான திசையில் வழி நடத்துவது உங்கள் பொறுப்பாகும். நீங்கள் அவர்களிடம் அன்பாகவும் பாசமாகவும் பேசினால், அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

***ஜெய் பிரேம சாந்தி!***

# ஆசிரமத்தில் விநாயகச் சதுர்த்தி

ஆகஸ்ட் 27ம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு ஸ்ரீ பிரேமஸ்வரர் ஆலயத்திலுள்ள பிரேமகணபதிக்கு சிறப்பு அபிஷேகத்துடன் தொடங்கினோம். அதனைத் தொடர்ந்து ஆசிரமத்திலுள்ள மற்றைய விநாயகர் சிலைகளுக்கு அபிஷேகங்கள் நடைபெற்றது.













*விநாயகப் பெருமானின் சிலையை கைகளில் ஏந்தி ஒவ்வொருவரும் அவருடைய ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்கள். இதற்குப் பின்னர் பலர் சுவாமிஜியின் பிரசன்னத்தை மிகவும் பலமாக உணர்ந்ததாக கூறினார்கள். அடுத்து மகாபிஷேகம் நடைபெற்றது. அபிஷேகத்திற்குப் பின் அனைவருக்கும் சுவையான பிரசாதங்கள் வழங்கப்பட்டன.*

ஆசிரமப் பிள்ளைகள் களிமண்ணில் விநாயகர் சிலைகள் செய்வதிலும் அதனை அழகாக அலங்கரிப்பதிலும் ஆர்வம் காட்டினார்கள். தவிர, நிறைய விநாயகர் ஓவியங்களைத் தீட்டுவதிலும் மும்முரமாக ஈடுபட்டார்கள்.









*பிள்ளைகள் செய்த விநாயகர் சிலைகள் கோவிலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.*



*மகாபிஷேகத்திற்குப் பிறகு விநாயகப் பெருமான்.*

# உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனச் செய்திகள்

## பெல்ஜியத்திலுள்ள விளாமர்டிங் நகரிலுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபன ஒருங்கிணைப்பாளர் நகுலனின் மறைவுக்கு நாங்கள் இரங்கல் தெரிவிக்கிறோம்

நகுலன் செப்டெம்பர் 15ம் தேதியன்று பெல்ஜியத்திலுள்ள விளாமெர்டிங் நகரில் அமைதியான முறையில் இறைவனடி எய்தினார். 2003ம் ஆண்டு சுவாமிஜி அவருக்கு எழுதிய கடிதத்தில், ‘‘நான் உன்னை இறைவனை நோக்கி வழிநடத்துவேன். நீ உன் உண்மையான சுயத்தை உணர்வாய். எதைப் பற்றியும் கவலைப்படாதே. நான் உன்னுடன் இருக்கிறேன்.’’ என்று குறிப்பிட்டிருந்தார். இந்த வார்த்தைகள், அவர் தன் வாழ்வின் இறுதிப் பயணத்தில் இருந்தபோது அவருக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தன; சுவாமிஜியின் ஆசீர்வாதத்தால் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற நம்பிக்கையையும் தைரியத்தையும் அவருக்கு அளித்தன.

அவரது அன்பான நினைவாக, அவரது ஆன்மா சாந்தியடைய ‘ஓம் நம சிவாய’ மந்திரத்தை உச்சரிப்பதற்காக நாங்கள் கோவிலில் கூடினோம்.

நகுலன் ஒரு சிறந்த பக்தராகவும் மிகவும் சுறுசுறுப்பான ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து, கடந்த 25 ஆண்டுகளாகப் பல ஆன்மிக சாதகர்களுக்கு பெரும் சேவை செய்தவர். 2002ம் ஆண்டில் அவரும் அவரது மனைவியும் தங்கள் வீட்டின் மாடி அறையை கிளை ஸ்தாபனத்திற்காக ஒரு கோவிலாக மாற்றி, அங்கு பல அற்புதமான நிகழ்ச்சிகளை நடத்தினர். சுவாமிஜியின் அருளால் இந்தச் செயல்பாடுகள் எதிர்காலத்திலும் தொடரும் என்று நாங்கள் நம்புகிறோம்.



சுவாமிஜியுடன் நகுலன்

அவரது அர்ப்பணிப்புள்ள பணி, அவரது அழகான குணம், சுயநலமற்ற தன்மை மற்றும் சுவாமிஜியின் மீதான ஆழ்ந்த அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றிற்காக அவரை நாங்கள் எப்போதும் அன்புடன் நினைவு கூர்வோம். அவரது ஆன்மா சாந்தியடைய நாங்கள் பிரார்த்திக்கிறோம்.

# உங்கள் கேள்விகளுக்கு சுவாமிஜி பதிலளிக்கிறார்

## *சேவை செய்வதனால் மட்டுமே ஒருவரால் ஞானத்தை அடைய முடியுமா?*



மனிதகுலத்திற்கு சேவை செய்வது மகேசனுக்கு பூஜை செய்வதற்கு சமம். நீங்கள் சேவை செய்யும் போது, உங்கள் சேவையின் நோக்கத்தின் மீதே உங்கள் கவனம் முழுவதும் தன்னலமின்றி இருக்க வேண்டும்.

முற்றிலும் அர்ப்பணிப்புடன் தன்நலம் மற்றும் அகந்தையின்றி பக்தியுடன் யார் சேவை செய்கிறார்களோ அவர்கள் இறைவனின் பாதாரவிந்தங்களை அடைகிறார்கள்.

நீங்கள் உங்கள் சொந்தப் பணத்தைச் செலவிடுவதாகவோ அல்லது உங்கள் சொந்த நேரத்தைக் கொடுப்பதாகவோ எண்ணாமல் சேவை செய்ய வேண்டும். மாறாக, மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கான திறனை வழங்கியவரும் அதன் மூலம் அவருடைய புனிதமான பாதராவிந்தங்களை அடைவதற்கான வாய்ப்பை உங்களுக்கு அளிப்பவரும் கடவுளே என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

## *ஆன்மிகத்தில் பெண்களையும் தாய்மையையும் பற்றி உங்களால் ஏதாவது கூற முடியுமா?*

இந்தக் காலத்தில தர்மத்தை உருவாக்கவும அழிக்கவும் பெண்களாலேயே முடியும்! ஒரு புகழ்பெற்ற கீழைநாட்டு கவிஞர், ஒரு பெண்ணை பல வழிகளில் ஒரு பூவுடன் ஒப்பிடலாம் என்று கூறியுள்ளார். பெண்களைப் பற்றி பல அழகான மற்றும் சிறந்த விஷயங்கள் கூறப்பட்டுள்ளன.

அவர்களைப் பற்றி தவறாகப் பேசுபவர்கள் அவர்களுடைய கணவர்கள் மட்டுமே! பெண்கள் எப்போதும் தங்கள் துணையிடமிருந்து அன்பையும் கவனத்தையும் எதிர்பார்க்கிறாரக்ள் என்றும், அது தங்களுக்குக் கிடைக்கவில்லை என்று உணரும்போது அவரக்ள் வருத்தமடைகிறார்கள் என்பதும் என்னுடைய கணிப்பு.

ஏதேனும் ஒரு காரணத்தால், ஒருவேளை வேலையில், ஒரு சோர்வான நாளுக்குப் பிறகு, கணவர் அவளுடன் குறைந்தபட்சம் அரை மணி நேரமாவது பேசவில்லை என்றால், ஒரு பெண் வருத்தப்படுவாள். ஏனென்றால், பொதுவாக அவளுடைய வாழ்க்கை அவளுடைய கணவரைச் சுற்றியே அமைகிறது. மேலும் அவளுடைய எண்ணங்கள் பெரும்பாலும் அவளுடைய கணவர் அல்லது குழந்தைகளைப் பற்றியே இருக்கும். ஆண்கள் இதில் வேறுபடுகிறார்கள், ஏனெனில் அவர்களுக்குக்

கவனிக்க வேண்டிய கவலைகளின் எல்லைப் பரந்தது, அதாவது தொழில், மதாந்திர கட்டணங்கள் போன்றவை.

புத்தர் ஒருமுறை தனது ஆன்மிக சங்கத்திற்குள் பெண்கள் அனுமதிக்கப்பட்டால், தனது போதனைகள் 5000 ஆண்டுகளுக்குப் பதலாக 2500 ஆண்டுகள் மட்டுமே நீடிக்கும் என்று கூறினார். பெண்களின் ஆர்வம் தனது தர்மத்தின் மீது இல்லாமல், தன் மீது மட்டுமே இருக்கும் என்பதை அறிந்தே அவர் இவ்வாறு கூறினார். ஏனெனில், ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பார்வை அன்பை மையமாகக் கொண்டது. எனவே, அவர்களால் ஆன்மிக வாழ்க்கையிலும் அன்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், அவர்கள் எரிச்சலோ அல்லது கோபமோ அடைந்தால், அவர்களைக் காளிதேவியுடன் ஒப்பிட முடியாது!

> ***"பெண்கள் தர்ம நெறியில் வாழ்ந்தால், அவர்களின் குழந்தைகளும் நீதி வழியைப் பின்பற்றுவார்கள்."***

ஒரு மனிதன் எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்தாலும், அவன் அவதாரமாகவே, ரிஷியாகவோ அல்லது மகாத்மாவாகவோ இருந்தாலும், அவன் ஒரு பெண்ணின் மகனே. பெண்கள் தர்ம நெறியில் வாழ்ந்தால், அவர்களின் குழந்தைகளும் நீதி வழியைப் பின்பற்றுவார்கள். ஆனால், தாய் கோபக்காரியாகவோ, அகங்காரம் கொண்டவளாகவோ, செருக்குடையவளாகவோ இருந்தால், குழந்தையின் வாழ்வும் அவ்வாறே அமையும்.

எனவே, முதன்முறையாக, ஒரு தாய்க்குப் பொறுமை இருக்க வேண்டும்; அப்போதுதான் அவள் இறைவனின் அருளால் ஆசீர்வதிக்கப்படுவாள்.

நம் இந்து மதம் பெண்களின் மற்றும் தாய்மார்களின் நிலையை மிகவும் போற்றிப் புகழ்ந்துள்ளது. மகாத்மா காந்தி தனது மனைவிக்கு மிகுந்த மரியாதை அளித்தார். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரம் தனது மனைவிக்கு ஆன்மிக ரீதியாக மிக உயர்ந்த இடத்தைக் கொடுத்து, அவளுக்குப் பூஜை செய்து, அவள் பாதங்களை வணங்கி வழிபட்டார். வாழ்வில் தாய்மார்களுக்கு அத்தகைய புனிதமான இடம் உண்டு. அவர்களில் பலர் சரியான பாதையிலிருந்து விலகி, தங்கள் குழந்தைகளையும் சரியான வாழ்க்கை முறையிலிருந்து திசை திருப்புகிறாரகள் என்பதை நினைக்கும் போது எனக்கு வருத்தமாக இருக்கிறது.

## *சமூகத்திற்கு நல்வாழ்வைக் கொண்டு வருவதில் ஒரு பெண்ணின் பங்கு என்ன?*

இதுவரை எந்தப் பெண்ணும் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டதில்லை. இது ஒரு மிகச் சிறந்த கேள்வி. இந்த உலகில் மிக முக்கியமானவர்கள் பெண்கள்தான். பெண்ணாகப் பிறப்பதை விட ஆணாகப் பிறப்பது ஒரு பெரிய பாக்கியம் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். இதற்குக் காரணம், ஒரு ஆணின் வாழ்க்கையில் மிகுந்த சுதந்திரம் இருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணுக்கு அப்படி இல்லை. மிகச் சிறு வயதிலிருந்தே அவள் தன்னைத்தானே வாழ்க்கையில் ஒழுங்குப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு பெண்ணாக இருப்பதில் பல சிறந்த குணங்கள் இயல்பாகவே அமைந்துள்ளன. குழந்தைகள் உள்ள ஒரு பெண்ணின் முக்கியப் பங்கு, தனது குழந்தைகளைச் சமூகத்திற்குப் பயனுள்ளவர்களாக இருக்கும்படி ஆன்மிக பக்தி வழியில் வளர்ப்பதுதான். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளால் தாங்கள் குருமார்களாக மதிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

கிழக்கத்திய புராணக்கதைகள், மனைவிக்குள் தங்கள் கணவர்களை மாற்றி, அவர்களைச் சரியான பாதைக்கு எப்படி வழிநடத்தினார்கள் என்பதை எடுத்துரைக்கின்றன. ஒரு பெண்ணால்தான் தன் கணவனின் தவறுகளை உண்மையாகக் கண்டறிந்து, அவன் ஏற்றுக் கொள்ளும்விதத்தில் அவனுடைய குறைகளை அவனிடம் எடுத்துரைக்க முடியும். ஏனென்றால். அவளே அன்பு, பக்தி மற்றும் பாசத்தின் உருவமாகத் திகழ்கிறாள்.

உலகிலோ அல்லது ஒரு சமூகத்திலோ எங்கு தீமை இருந்தாலும் அத்தகைய தீய சக்திகளிலிருந்து சமூகத்தை விடுவிப்பதற்காகப் பெண்களும் தங்கள் பங்கை ஆற்ற வேண்டும். ஒரு பெண் அன்பு, பாசம் மற்றும் கடவுள் பக்தி பற்றிப் பேசும்போது, அது அனைவராலும் எளிதில் புரிந்து கொள்ளப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, பெண்கள் இதைத் தொடர்ச்சியாகச் செய்வதில்லை. ஏனெனில் அவர்கள் ஐம்பது நாட்களுக்குப் பக்தியைக் காட்டினால், அடுத்த ஐம்பது நாட்களுக்கு பக்திக்கு எதிரானதைக் காட்டுவார்கள். தாங்கள் சரி என்று நினைப்பதை உறுதியாகப் பின்பற்றும் தன்னம்பிக்கை அவர்களிடம் பெரும்பாலும் இருப்பதில்லை. ஆண்களிடம் அதே அளவு அன்பு, பாசம் மற்றும் பக்தி இல்லாமல் இருக்கலாம்; அவர்களிடம் கால் பங்கு மட்டுமே இருக்கலாம். ஆனால், அதிர்ஷ்டவசமாக அவர்களால் அதைத் தங்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக வெளிப்படுத்த முடிகிறது.

இதனால்தான் புத்த பகவானிடம் பெண்களுக்குத் துறவற ஆடையை வழங்கும்படி கேட்டபோது, அவ்வாறு செய்தால், தனது தர்மத்தின் ஆயுள் பாதியாகக் குறைந்து விடும் என்று அவர் குறிப்பிட்டார்.[1] அவர் ஏன் அப்படிச் சொன்னார்? ஏனென்றால், தர்மத்தை உறுதியாகப் பின்பற்றுவதற்கான மன உறுதி பெண்களுக்கு இல்லை. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் சமூகத்தில் ஏறக்குறைய அடிமைகளாக இருந்தனர். ஆனால் இன்று நவீன உலகில் பெண்கள் பல விஷயங்களில் ஆண்களுக்குச் சமமாக இருக்கிறார்கள்.

இக்காலத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்புகளும் சம உரிமைகளும் உள்ள இடங்களில் ஆண்களிடம் கொடுக்கப்படும் அதே காரியங்களை பெண்களாலும் செய்ய முடிய வேண்டும்.

முந்தைய சமூகத்தில் அடிமைத்தனமான நிலையில் இருந்த பெண்கள், இப்போது சம உரிமைகளை அனுபவிக்கின்றனர். மிக விரைவில் அவர்களுக்கு 75 சதவீத உரிமைகளும் ஆண்களுக்கு 25 சதவீத உரிமைகளும் மட்டுமே இருக்கும்! விரைவில் சமூகத்தில் ஆண்களை விட பெண்கள் அதிக உரிமைகளை அனுபவிப்பார்கள். இது கலியுகத்தின் ஒரு பகுதியாகும்.

[1] ஆரம்பத்தில் புத்தர் துறவற சங்கத்தில் பெண்களை சேர்ப்பதற்கு மறுத்தாலும் பின்னர், அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு பல பெண்களுக்கு பௌத்தத் துறவிகளாக தீட்சை அளித்தார்.

## சத்சாங்கம்:

# மரணம் உங்களை வந்தடைவதற்கு முன் விரைந்து செயல்படுங்கள்!



எதுவுமே நிரந்தரமாக இருப்பதில்லை என்ற உண்மையை நாம் சிந்திப்போம்!

இறைவனின் எல்லையற்ற கருணையால்தான் நாம் இந்த மனிதப் பிறவிளை அடைந்திருக்கிறோம். இந்த வாய்ப்பு உங்களுக்கு அடிக்கடி கிடைக்காது. உங்களுடைய ஆன்மிகச் சாதனைகளைச் செய்வதில் நீங்கள் எவ்வளவு மெதுவாக இருக்கிறீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். மரண தேவனான யமன் இன்று திடீரென்று வந்து விட்டால், நான் தயாராக இல்லை என்பதால் வர முடியாது என்று என்னால் சொல்ல முடியாது! மேலும் யமன் எப்போது நம்மிடம் வருவார் என்பதும் நமக்குத் தெரியாது. அவர் வந்து விட்டால், தப்பிப்பதற்கு வாய்ப்பே இல்லை.

எனவே, மரணம் இன்னும் தொலைவில் இருக்கும்போதும், ஆன்மா உடலில் இருக்கும்போதும், இந்த நேரத்தைப் பயன்படுத்தி நமது அனைத்து தவங்களையும் செய்து, இறைவனிடம் சரணடைந்து, மரணத்தை வெல்ல வேண்டும். இதைச் செய்யாமல், “நான் என் பயிற்சிகளைப் பிறகு செய்கிறேன்” என்று சொல்வது முட்டாள்தனம். ஏன் தாமதிக்கிறீர்கள்? கடந்து செல்லும் ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை நெருக்கமாக்குகிறது.

ஆகவே, ஒரு நிமிடம் கூட வீணாக்காமல், இந்த நேரத்தை நம்மை மேம்படுத்திக் கொள்ளப் பயன்படுத்த வேண்டும்.

காலம் என்பது ஒரு நித்தியக் கடிகாரத்தின் முட்களைப் போன்றது. அது ஒருபோதும் இயங்குவதை நிறுத்துவதில்லை. நமது ஆன்மிகப் பயிற்சிகள் ஒரு வற்றாத ஊற்றிலிருந்து பாயும் நீரைப் போல இருக்க வேண்டும் — அவை நிற்காமல் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

நாம் ஒரு நொடியைக் கூட வீணாக்கினால், அதற்கான விலையை நாம் கொடுக்க வேண்டியிருக்கும். நாம் நல்ல உள்ளத்துடன் இறைவனை உண்மையாக ஏங்கினால், அந்தத் தவறை நாம் செய்ய மாட்டோம். நமது மனதை ஒருமுகப்படுத்தி, நமது சாதனைகளை நிறைவு செய்தால், மனித வாழ்வின் இலக்கை அடைவதிலிருந்து நம்மைத் தடுப்பதற்கு எந்தத் தடைகளும் இருக்காது.

மனித உடலை அடிக்கடி பெறுவது எளிதல்ல. மனிதர்களைத் தவிர, மற்ற உயிரினங்கள் ஆன்மிக ரீதியாக வளர்ச்சி அடைய வாய்ப்பில்லை. எமன் நம்மிடம் வரும்போது, நாம் அவனுடன் சென்றே ஆக வேண்டும்ஹ மரணத்தை நாளை வரை ஒத்தி வைக்க முடியாது. அந்தத் தருணத்தில் துக்கப்படுவதிலோ அல்லது அழுவதிலோ எந்தப் பயனும் இருக்காது. எனவே, உங்களுக்கு வாய்ப்பு இருக்கும்போதே உங்கள் ஆன்மிகச் சாதனைகளைச் செய்யுங்கள்.

மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பவர்கள், தங்கள் ஆன்மிகச் சாதனைகளை மிகுந்த தீவிரத்துடன் செய்ய வேண்டும். மரணத்திற்குப் பிறகு, உங்கள் துணையையோ, அல்லது உங்கள் உறவினர்களையொ பற்றி நீங்கள் இனி சிந்திக்க மாட்டீர்கள். ஒரு கனவிலிருந்து விழித்தெழும் போது, உங்கள் கனவில் கண்டவர்களை நீங்கள் அரிதாகவே நினைவில் வைத்திருக்கிறீர்கள்; உங்கள் கனவுகளில் பலவற்றை நீங்கள் மறந்து விடுகிறீர்கள்.
அதேபோல், நீங்கள் பரமாத்மாவின், அதாவது பிரபஞ்ச சக்தியின் இயல்பான ஞானத்தை அடையும் போது, இந்த உலகம் ஒரு கனவைப் போலத் தோன்றும். உங்கள் கனவுகளில் நீங்கள் காணும் குடும்பம், பணம் அல்லது ஆடம்பரங்களுடன் உங்களுக்கு எப்படி உண்மையான தொடர்பு இல்லையோ, அதேபோல் இந்த உலகத்துடனும் உங்களுக்கு உண்மையில் தொடர்பு இல்லை.

லௌகீக விஷயங்களையும் பணத்தையும் துரத்திச் சென்று திசைதிருப்பப்படாமல், தயக்கமின்றி உங்கள் கடமையைச் செய்யுங்கள். உங்களுக்கு வழங்கப்பட்ட நோக்கத்திற்காக இந்த சரீரத்தைப் பயன்படுத்துங்கள். நீங்கள் இதை உணரவில்லையென்றாலும், இந்த நோக்கத்திற்காக அதைப் பயன்படுத்துவதை தாமதித்தால் அது பெரிய இழப்பாக இருக்கும்.

காலம் செல்லச் செல்ல, நிலைமை மேலும் மேலும் சிக்கலாகும். உங்கள் அலட்சியம் உங்களை வீழ்ச்சியடையச் செய்யும். இதனால்தான் ஒரு நொடியைக் கூட வீணாக்க வேண்டாம் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் அவசரமாக, உண்மையான பக்தியுடன் உங்கள் ஆன்மிகப் பயிற்சிகளை விரைவில் செய்ய வேண்டும்.

உங்களால் இதைச் செய்ய முடிந்தால், விரைவில் முக்தியை அடைவீர்கள்.



"விநாயகப் பெருமானை வணங்குங்கள். மகத்தான, கற்பனைக் கெட்டாத தெய்வீக சக்தி உங்களுக்குத் துணையாக வந்து உங்கள் வெற்றிக்குத் தடையாக இருக்கும் அனைத்தையும் அகற்றும். அந்தப் பெருங்கடவுள் தனது எல்லையற்ற கருணையினால் அனைத்தையும் நேரடியாக உங்களுக்கு வழங்குவராக."

~ சுவாமிஜி

Premananda Youth International

# இளைஞர் குழுவினருக்கு ஒரு செய்தி

## உங்கள் யோசனைகளை உங்கள் பெற்றோரரை எப்படி கேட்க வைப்பது?

பெற்றோர் உட்பட அனைவருமே தங்களை விரும்புபவர்களை விரும்புகிறார்கள், நம்புகிறார்கள். குறிப்பாக தங்கள் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதை விரும்புகிறார்கள். நீங்கள் அவர்களின் கருத்துக்களைக் கேட்டு ஏற்றுக் கொள்வது முக்கியம். அப்போதுதான் அவர்கள் உங்கள் கருத்துக்களைக் கேட்கவும் ஏற்றுக் கொள்ளவும் அதிக ஆர்வம் காட்டுவார்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளப்பட விரும்புகிறார்கள். யாரும் நிராகரிக்கப்படுவதை விரும்புவதில்லை. வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், உங்கள் ஆன்மிகப் பாதையில் பொறுமையையும் புரிதலையும் வளர்த்துக் கொள்வதற்கும் இவை மிக முக்கியமான அம்சங்களாகும்.

பள்ளி அல்லது கல்லூரியில் நல்ல தேர்வு முடிவுகளைப் பெற நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்தால், உங்கள் பெற்றோர் மகிழ்ச்சியடைவார்கள். நீங்களும் மகிழ்ச்சியடைவீர்கள், மற்றவர்களும் உங்களை மதிப்பார்கள். இது உங்கள் கையில்தான் உள்ளது.

நீங்கள் உங்களிடம் உண்மையாக இருக்க வேண்டும். மேலும், உங்கள் சோம்பலை உதறித் தள்ள வேண்டும். தியானமும் ஆன்மிகச் சாதனைகளும் வாழ்க்கையைப் பற்றிய உங்கள் மனப்பான்மைகளை மேம்படுத்தவும். உங்கள் கவனத்தை அதிகரிக்கவும் உதவுகின்றன.

ஓ, இளைஞரகளே! உங்களுக்கும் உங்கள் பெற்றோருக்கும் இடையே உள்ள தலைமுறை இடைவெளி காரணமாக, உங்கள் கருத்துக்கள் அவர்களுடைய கருத்துகளிலிருந்து வேறுபடும்.

எனவே, அவர்கள் உங்களுடைய சில செயல்களுக்கு எதிராக இருக்கலாம். ஆனால், நீங்கள் அவர்கள் மீது கோபப்பட்டால், உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்கிறீர்கள். உங்கள் பெற்றோர் அறியாதவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு மரியாதை காட்டுங்கள்.

இது நீங்கள் செய்ய வேண்டிய ஒரு சிறந்த செயலாகும். அவர்கள் நீங்கள் பலமுறை கேட்ட விஷயங்களையே மீண்டும், மீண்டும் பேசும் போது, நீங்கள் அதை முதல் முறையாகக் கேட்பது போல பொறுமையுடனும் அன்புடனும் கேளுங்கள். அது அவர்களுக்கு மன அமைதியைத் தரும்.

ஒவ்வொரு மாதமும் பிரேமானந்தா இளைஞர் சங்கத்தினரின் சிறப்புப் பண்பொன்றினை முன்னிலைப்படுத்தி வருகிறோம்.

இம்மாதம்:

## உண்மையான அன்பு என்பது உள்ளத்தை உருக்கும், இனிமையான வார்த்தைகள் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்

என் தாயின் தூய்மையான அன்பை நான் புரிந்து கொண்டேனா? என் தந்தை கோபத்துடன் என்னைக் கண்டித்தபோது அவருடைய அன்பை நான் புரிந்து கொண்டேனா? என் சகோதர சகோதரிகள் என் தவறுகளை திருத்த முயன்ற போது அவர்களின் அன்பை நான் புரிந்து கொண்டேனா, (...) உண்மையான அன்பு என்பது மற்றவர்களின் உள்ளத்தை உருக்கும், இனிமையான வார்த்தைகள்தான் என்று நாம் நினைத்தால், தெய்வீக அன்பின் உண்மையான தன்மையை நம்மால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியுமா?

